Dt.:     Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 286 / 2018

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : பரமதுரை | Father’s Name/ Husband Name | : மதுரபாண்டி |
| Village | உத்தமபாளையம் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2023

(எதிரி ஆஜர் )

<u>முதல் விசாரணை</u>

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . தற்போது நான் ராயப்பன்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 11.01.2014 ம் தேதி கடமலைக்குண்டு காவல் நிலைத்தில் தலைமைக் காவலராக பணியிருந்த போது சார்பு ஆய்வாளர் குமார் , நான் மற்றும் 1600 அழகுமுருகன் ஆகிய மூவரும் அதிகாலை 5.00 மணிக்கு உப்புத்துரையில் இருந்தது ஆட்டுப்பாறை சாலையில் சென்று கொண்டிருந்தோம். அப்போது 2 பேர் போய்க்கொண்டிருந்தார்கள். ஒருவர் கையில் துணியால் சுற்றப்பட்ட பொருள் இருந்தது . அவர்கள் எங்களை பார்த்தவுடன் வேகமாக நடந்தார்கள். உடனே சார்பு ஆய்வாளர் எங்களை எச்சரிக்கை செய்த உடன் நானும் அழகுமுருகனும் வேகமாக சென்று அந்த இரு நபர்களை பிடித்தோம். அவர்களை விசாரணை செய்த போது ஒருவர் பெயர் ஆறுமுகம் என்றும் மற்றொருவர் செல்வக்குமார் என்றும் சொன்னார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த பொருளை துணியை எடுத்து பார்த்தபோது கையில் நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்தார்கள். உடனே ஆறுமுகம் என்பவரிடம் மயிலாடும்பாறை கிராம உதவியாளர்கள் சுரேஷ் மற்றும் ராமானுஜம் ஆகியோர் முன்னிலையில் எவ்வித

அச்சுறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலத்தை 5.45 மணிக்கு பதிவு செய்தும் , அதே இடத்தில் நாட்டுத்துப்பாக்கி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 7.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினோம் . பின்னர் 9.00 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் செல்வக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்று வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கி குழாய் ஒன்றையும், அதன் அடிப்பாக கட்டை ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் 12.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினோம் . எதிரிகள் மற்றும் கைப்பற்றப் பட்ட சொத்துகளுடன் காவல் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.06.15 15:48:04 +0530